



# FRIDAY SERMON

22 MARCH 2019

(14 RAJAB 1440 AH)

**HADHRAT MUHYI-UD-DIN AL-KHALIFATULLAH
MUNIR AHMAD AZIM**

## "ANTI - ISLAMIC" TERRORISM

## "இஸ்லாமிற்கு எதிரான பயங்கரவாதம்"

TAMIL VERSION / தமிழ் பதிப்பு

ச லாமிற்கு பிறகு தஷஹ்ஹுதும், தஅவசும், அல்.்.பாத்திஹாவும் ஓதிக்கொண்டு **ஹஸ்ரத் கலீ.்.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் தம் ஜுமா பேருரையினை ஆரம்பித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை, அதாவது மார்ச் 15 – ம் தேதியன்று இஸ்லாம் மற்றும் பயங்கரவாதத்தினை குறித்த எனது பிரசங்கத்தை வழங்க அல்லாஹ்விடமிருந்து நேரடியாக கட்டளையை நான் பெற்றிருந்தேன் என்பது உங்களுக்கு நினைவிருக்குமல்லவா? இது ஒரு இறை அத்தாட்சி ஆகும் என்பதை புரிந்து கொள்ள எந்த ஒரு சிரமமும் உங்களுக்க இருக்காது. இஸ்லாத்தின் மற்றும் ஒட்டுமொத்த முஸ்லீம் தேசத்தின் இரட்சிப்பிற்காக நாம்

மேன்மேலும் துவா செய்ய வேண்டும். இஸ்லாமிற்கு எதிரான நாடுகள் மற்றும் அமுஸ்லீம் மக்களின் தீமைகளிலிருந்து அல்லாஹ் அனைவரையும் அதாவது நமது சகோதரர்கள், சகோதரிகள், குழந்தைகள் மற்றும் அனைத்து இஸ்லாமிய தேசங்களை பாதுகாக்கும்படி நாம் செய்யும் அத்துவா, நமக்கு இரட்ச்சிப்பின் வாசலை திறந்தருளும். இன்ஷா அல்லாஹ். ஆமீன்.

முஸ்லீம்களுக்கு எதிராக பயங்கரவாத செயல்கள் நிகழ்வதைப் பார்க்கும் பொழுது மனம் உடைந்து விடுகிறது. இஸ்லாம் அமைதியை மட்டும் வழங்கும் ஒரு மார்க்கம் என்பதை நாம் அனைவரும் அறிந்திருக்கையில், முஸ்லீம்களை பயங்கரவாதிகள் என்று பெரிய சக்திகள் குற்றம் சாட்டுகின்றனர். இஸ்லாத்தின் மற்றும் இறைதூதர் அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய செய்தி முஸ்லீம்களுக்கு மட்டுமல்ல, இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளாதவர்களுக்கு கூட ஆகும். அந்நிலையில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களும், ஏற்றுக் கொள்ளாதவர்களும் அச்செய்தியின் பகுதியாவார்கள்.

நமது தூதர் அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் செய்தி மானிட குலத்திற்காகும். இஸ்லாமின் செய்தி என்பது அன்பு, அமைதி மற்றும் உரையாடலின் செய்தியாகும். மக்களுடன் நல்ல உறவைப் பேணுவதற்கு இது அவசியமானவையாகும். ஏனென்றால், நல்ல உறவுகள் இல்லாமல் இருந்தால், வாழ்கை கொடூரமான விலங்குகளால் சூழப்பட்ட காட்டில் வாழ்வது போல் இருக்கும்.

பயங்கரவாதம் என்பது நம்பிக்கையுடையவோ மதத்தினுடையவோ பகுதியல்ல. பயங்கரவாதம் என்பது வெறுப்பு மற்றும் பேரச்சத்தின் பிரதிபலனாகிறது. கடந்த வெள்ளிக்கிழமையன்று நீயூசிலாந்தில் கிறிஸ்ட்சர்ச்சில் நடந்த பயங்கரவாத தாக்குதல் அதற்கு ஒரு சான்றாக இருக்கிறது. இஸ்லாமிய போபியா (இஸ்லாமிற்கு எதிராக வெறுப்புணர்ச்சி மற்றும் ஒருவகையான பயத்தினை கொண்டுள்ள மக்கள்) பிடித்த சிலமக்கள் இஸ்லாமிற்கு எதிராக வெறுப்பு மற்றும் பகைமையினை பிரச்சாரம் செய்து வருகின்றனர். உலகெங்கிலும் உள்ள முஸ்லீம்கள் அழிந்துவிட வேண்டும் என்ற விருப்பத்தை அவர்கள் வெளிப்படுத்தி வருகின்றனர்.

இஸ்லாமிய போபியவை கொண்ட மக்கள் வாழும் நாடுகளில் முஸ்லீம்களுக்கு என்ன பாதுகாப்பு? நியூசிலாந்தில் நிகழ்ந்த பயங்கரவாத தாக்குதலில் ஆண், பெண் மற்றும் குழந்தைகள் உட்பட 50 பேர்கள் உயிரிழந்தனர். வெள்ளிக்கிழமை தொழுகைக்காக வழக்கம் போல் அவர்கள் நியூசிலாந்தில் கிறிஸ்ட்சர்ச்சிலுள்ள இரண்டு மசூதிகளில் ஒன்று சேருகையின் போது மிக கொடூரமான நிலையில் கொலை செய்யப்பட்டனர்.

ஆஸ்திரேலியாவில் நடத்திய பயங்கரவாத தாக்குதலைக் குறித்து அந்த பயங்கரவாதி 73 பக்கங்களைக் கொண்ட ஒரு ஆவணத்தை தயாரித்திருந்தார். அவர் தனது குற்றத்தை ஒப்புக்கொள்வதுடன், அமைதியான நம்பிக்கையாளர்களுக்கு எதிரான இந்த இழிவான செயலின் பின்னணியில் உள்ள நோக்கங்களையும் விளக்குகிறார். மட்டுமல்ல தனது மூன்றாவது இலக்கை அதாவது ஆஷ்பர்ட்டனிலுள்ள (Ashburton) மசூதியின் மீதான தாக்குதலை அடைய முடியாமல் போனதற்கு அவர் வருத்தத்தையும் தெரிவிக்கிறார்.

இந்த தாக்குதலுக்கான அவரது அகத்தூண்டுதல், மதீனிலீ பென் டோனால்ட் டிரெமப் தலைமையிலான வலது சாரி ஐயோப்பியன் யூனியன் மற்றும் பிரெஞ்சு அரசியல் கட்சிகளும் ஆகும். அதனை அவர், “புதுப்பிக்கப்பட்ட வெள்ளை அடையாளம் மற்றும் பொதுவான நோக்கத்தின் சின்னம்” என்று கூறுகிறார். ஒஸ்லோ மற்றும் உட்டோயா (Oslo and Utoya) கொலையின் ஆசிரியரான நோர்வே பயங்கரவாதியான ஆண்டேர்ஸ் பிரிவிக்கைப் (Anders Breivik) பற்றியும் அவர் தனது ஆணவத்தில் குறிப்பிடுகிறார். பயங்கரவாதியான அவர் தனது செய்கை மற்றும் நடவடிக்கையினைப் பற்றி எந்த வருத்துமுமின்றி அதனை நியாயப்படுத்தி பேசுகிறார். எனவே தற்போது நடைமுறையிலுள்ள மிக பெரிய தண்டனையை அவருக்க வழங்க வேண்டும்.

இந்த பயங்கரவாத தாக்குதல்களை உலகின் பெரும்பாலான தலைவர்களும் கண்டித்தனர். ஆனால் அவ்வார்த்தைகள் அவர்களின் உதடுகளில் மட்டுமே உள்ளன. உதாரணமாக, அமெரிக்கன் ஜானாதிபதி இந்த தாக்குதல்களை கண்டித்த போது, வெள்ளை தேசியவாதிகளுடைய கொள்கை

உலக அமைதிக்கு அச்சுறுத்தல் அல்ல என்பதையும் அதனுடன் இணைத்துக் கூறுகிறார். உண்மையில், வெள்ளை இனவெறி கொள்கையைப் புதுப்பித்தலின் அடையாளத்தை டோனால்ட் டிரெமப்பிடம் காணும் அமெரிக்கன் ஜனநாயகவாதிகளால் (Democrats) அவர் கடுமையாக விமர்சிக்கப்பட்டார். இஸ்லாமிற்கு எதிரான அவரது வெறுக்கத்தக்க பேச்சு, இஸ்லாமிய விரோத அறிக்கை மற்றும் கொள்கை போன்றவை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இந்த கொடூரமான கொலைகளுக்கு அகதூண்டுதலாக மாறியது. இன மற்றும் கலாச்சார பன்முகத்தன்மையை மதித்து நடந்து கொள்ளும் ஒரு நாட்டில் இந்த கொடூரமான படுகொலைகள் நிகழ்ந்திருக்கின்றது.

நியூசிலாந்து பிரதமர் ஜசீந்தா ஆர்டேண் தனிப்பட்ட முறையில் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு சென்று தனது இரங்கலைத் தெரிவித்த பின்னர் தேசத்தை அழைத்து அவர் உரையாற்றியபோது **“இது தனது நாட்டின் இருண்ட நாட்களில் ஒன்று”** என்று தெரிவித்தார். இந்த இரண்டு மசூதிகள் மீதான பயங்கரவாத தாக்குதலை அவர் ஆற்றல்வாய்ந்த வார்த்தைகளால் கண்டித்து, இதற்கு பொறுப்பானவர்களுக்கு தனது நாட்டில் அல்லது உலகில் எங்கும் இடமில்லை என்று கூறினார்.

2019 மார்ச் 15 –ம் தேதியன்று நாடளுமன்றத்தில் செய்தியாளர் சந்திப்பின் போது அவர் கூறியதாவது, **“இந்த வன்முறைச் செயல் நாம் தேர்வுசெய்ததல்ல. ஏனெனில் நாங்கள் இனவெறியை மன்னிப்பதில்லை. நமது தேசம் பயங்கரவாதத்தை வெளியேற்றியுள்ளது. அதற்கு இங்கு அனுமதியில்லை. இக்காரியங்களுடன் எந்த தொடர்பும் நமது தேசத்திற்கில்லை. ஏனெனில் நாம் பன்முகத்தன்மையினைக் கொண்டிருக்கிறோம். இரக்கமுடைவர்களாவோம். கருணையுடையவர்களாவோம். தேவைபடுபவர்களுக்கு இங்கு அடைக்கலம் உள்ளது. நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன். இந்த பயங்கரவாத தாக்கதல் மூலம் நம் நாட்டை அசைத்து விடலாம் என்றோ, நம் நாட்டின் மதிப்பீடுகளை அழித்துவிடலாம் என்றோ எவர் ஒருவரும் எண்ண வேண்டாம்.”**

நியூசிலாந்து பிரதமரின் இந்த அறிக்கை நிச்சயமாக இந்த பயங்கரவாத தாக்குதல்களால் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு

ஆறுதலளிப்பவையாகும். நியூசிலாந்தினை தங்கள் தேசமாக தத்தெடுத்து கொண்டவர்களுக்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கும் இது மிக பெரிய ஆறுதலாகும்.

**ஆன்மீக தலைவர் மற்றும் அல்லாஹ்வின் கலீ.்.பா என்ற நிலையில் நானும் ஜமாஅத்துச் சஹீஹில் இஸ்லாமும் இந்த பயங்கரவாத தாக்குதலைக் கடுமையாக கண்டிக்கிறோம். துயரமடைந்த குடும்பங்களுக்கும் வெவ்வேறு தேசத்தைச் சார்ந்த முஸ்லீம் சகோர – சகோதரிகளுக்கும் குழந்தைகளுக்கும் அதைபோல் 2019 மார்ச் 15-ம் தேதியன்று பயங்கரவாத தாகுதலில் பலியானவர்களின் குடும்பங்களுக்கும் எங்கள் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம். இந்த நாட்டுடன் நாங்கள் முழு மனதுடனும் ஒற்றுமையுடனும் இருக்கிறோம். நியூசிலாந்து சமூகம் அதன் அமைதியை அதாவது எப்போதும் சிறப்பியல்புள்ள அதன் பழய அமைதியை மீண்டும் திரும்ப பெற பிரார்த்தனை செய்கிறோம்.**

பாதிக்கபட்டவர்கள் உலகின் வெவ்வேறு பகுதிகளிலிருந்து வந்தவர்கள் பாக்கிஸ்தான், டர்கி, சௌதி அரேபியா, பங்கலாதேச், இந்தோனேஷியா, மலேசியா, மொரிஷியஸ், இந்தியா போன்ற நாடுகளிலிருந்து வந்தவர்கள். 2019 மார்ச் 15 –ம் தேதியன்று மத்தியம் வெள்ளிக்கிழமை தொழுகையின் போது, நீயூசிலாந்து கிறிஸ்ட்சர்ச்சில் உள்ள அல் நூர் மசூதிகளுக்குள் துப்பாக்கி சூடு நடத்திய பின்னர் அவர் அங்கிருந்து ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் உள்ள லின்வுட் இஸ்லாமிய மையத்திற்கு சென்று தனது படுகொலைகளைத் தொடர்ந்தார்.

கிறிஸ்ட்சர்ச்சில் இரண்டு மசூதிகளுக்கு எதிரான தக்குதல்களில் 50 பேர் இறந்தனர். 50 பேர் காயமடைந்தனர். அக்குழுவில் 53 வயதுள்ள மூஸசித் முஹம்மது ஹுசேன் என்ற ஒரு மொரிஷியனும் பயங்கரவாதியின் தோட்டாக்களுக்கு இரையாகிவிட்டார்.

**எனது சார்பாகவும், ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமின் உறுப்பினர்கள் சார்பாகவும் இந்த குடும்பங்கள் அனைத்திற்கும், இந்த துயர சம்பவத்தில் பலியன மொரீஷியனின் குடும்பத்தினருக்கம் எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களை மீண்டும் தெரிவிக்க விரும்புகிறேன். அல்லாஹ் அவர்களிடம் இரக்கம் காட்டி,**

**பரலோகத் தோட்டத்தில் அவர்களுக்கு உயர்ந்த இடத்தை வழங்கி அருள்வாயாக! ஆமீன்.**

காஷ்மீர், சீனா, சிறியா, இந்தியா, பர்மா, மற்றும் மியான்மார் போன்ற நாடுகளில் நிகழ்ந்துவரும் வன்முறைகளைக் குறித்து யுணைற்றட் ஸ்டேற், யுணைற்றட் நேஷன், யூரோப்பியன் யூணியன் மற்றும் அரபு உலகவும் காது கேளாததை நிறுத்துவார்கள் என்று நம்புகிறேன்.

இந்த தாக்குதலுக்கு எதிராக ஒரு சில நாடுகளும், அரச தலைவர்களும் மட்டுமே பேசியுள்ளனர். இது ஒரு பயங்கரவாத செயல் என்று அவர்கள் வர்ணித்தனர். அதே நேரத்தில் இத்தாலி (Italy) போன்றவர்கள் இந்த தாக்குதலுக்கு எதிராக அதன் நித்தையான வார்த்தைகளை கூறியதாக காணவில்லை.

இத்தாலியின் தற்போதைய சில அமைச்சர்கள் இஸ்லாமிய போபியா பாதித்தவர்களாவார்கள். அவர்கள் வெள்ளையர்களின் உரிமைகள் மற்றும் மேலாதிக்கத்தை பாதுகாப்பவர்களாக இருக்கின்றனர். இத்தாலியின் துணை பிரதமர் மற்றேவோ ஸால்வினி (Matteo Salvini) இந்த தாக்குதல்களை கண்டித்தது உதடுகளால் மட்டுமாகும். உலகின் கண்கள் அவர் மீது இருப்பதால் மட்டுமே அதற்கு அவர் முற்பட்டார். ஆனால் அவர் மேலும் கூறினார். இஸ்லாமிற்கு எதிரான தீவிரவாதம் மட்டுமே கவனத்தை ஈர்பதாக உள்ளது. ப்ரெண்டன் டாரண்டை (Brenton Tarrant) ஒரு பயங்கரவாதி என்று கூறிய ஒரு சிலரே உள்ளனர். இல்லையெனில் அவர் வெறும் துப்பாக்கி சுடும் ஒரு வீரர் என்று பெரும்பான்மையானவர்களும் கூறியிருந்திருப்பார்கள். இது என்ன போலித்தனம்! இதே நபர் ஒரு முஸ்லீம் பெயரைக் கொண்டவராகயிருந்திருந்தால், இஸ்லாமியரல்லாதவர்களைக் அவர் கொன்றிருந்திருந்தால் உடனயே அவர் ஒரு பயங்கரவாதி என்று முத்திரை குத்தியிருந்திருப்பார்கள். ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாம், நியூசிலாந்து முஸ்லீம்களுடன் ஒற்றுமையுடன் உள்ளது. மேலும் துயரமடைந்த குடும்பங்களின் வருதத்தில் பங்கேற்கின்றது. நிச்சயமாக இது அவர்களுக்கு மிகவும் கடினமான ஒரு சோதனையாகும். நியூசிலாந்தின் அதிகாரிகள் தேவையான

நடவடிக்கைகளை எடுப்பார்கள் என்றும் அதைபோல இந்த காட்டுமிராண்டித்தனமான செயலுக்கு எதிராக சர்வதேச சமூகம் கண்டனம் தெரிவிப்பார்கள் என்றும் நாங்கள் நம்புகிறோம்.

மரணத்திற்கு உள்ளாகிய அப்பாவிகளாகிய மக்களுக்காக நமக்கு பிரார்த்தனை செய்வோம். அல்லாஹ் அவர்களின் ஆன்மாக்களுக்கு அமைதியை வழங்குவானாக!. பரிசுத்தமான ஒரு பகுதியில் வைத்து அப்பாவிகள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் அவர்களுக்கு அல்லாஹ் ஜன்னத்துல் பிர்தௌஸ் வழங்கி அருள்புரியவானாக! துன்பம் அனுபவிக்கும் உலகெங்கிலுமுள்ள நமது முஸ்லீம் சகோதரர், சகோதரிகள் மற்றும் குழந்தைகளுக்காக பிரார்த்தனை செய்வோம். உலகெங்கிலும் சமீபத்தில் நிகழ்ந்த பேரழிவுகளில் பாதிக்கப்பட்ட அப்பாவிகள் மற்றும் வீடற்ற அனைவருக்காகவும் பிரார்த்தனை செய்வோம். மூஸாம்பிக் போன்ற நாடுகளில் ஐடாய் சூறாவளி பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. ஆஸ்ரேலியா, கெனியா, மலாவி, மெக்ஸிகோ, பாப்புவானுஹெனியா, சௌத் ஆப்பிரிக்கா, டான்சானியா, உகாண்டா போன்ற நாடுகளில் இயற்கை சீற்றத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்காகவும் நமக்கு பிரார்த்தனை செய்வோம். இன்ஷா அல்லாஹ் ஆமீன்! யா ரப்பல் ஆலமீன்!.

**Translated by:**

*Naib Amir - Azim Ahmad*
*7339689239*

## ISSUED BY

**R. JAMALUDDIN RAOTHER SAHIB**
Amir Kerala South Zone, India
Kerala contact
No: 9447001832

**SIRAJ DEEN SAHIB**
Amir Tamilnadu state, India
Tamilnadu Contact
No: 7502272774

**PUBLISHED BY:**
**JAMAAT-UL-SAHIH-AL-ISLAM**
**KALIAKKAVILAI BRANCH**
**(TAMILNADU AND KERALA BORDER)**
**Ph No: 9789180817, 9171977109**